# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,705 — 1959 මාර්තු 20 වැනි සිකුරාදා — 20.3.1959**

11,705 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II—சட்ட சம்பந்தமானது

## சுப்பிறீங்கோட் கிறிமினல் வழக்கு விசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள்

### பிரசித்த பத்திரம்

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : யாழ்ப்பாண மாநகர மண்டபத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் யாழ்ப்பாணம், மன்னார்,வவுனியா, முல்லைத்தீவு டிஸ்திறிக்கைச் சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 30 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலை 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ம. ஸ்ரீகாந்தா,
வட மாகாண பிஸ்கால்.

பிஸ்கால் கந்தோர்,
1959 ம் ஹூ பங்குனி மீ 16 ந் உ.

---

### விளம்பரம்

1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதத்தின் நான்காம் வாரத்திற்குரிய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 26 ந் திகதி வியாழக் கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 23 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 10 ந் திகதி.

பேர்னர்ட் த. சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

---


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது